விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 171 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 25 புதன்கிழமை (08.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## செப்ரெம்பர் வரை அரிசி கையிருப்பில்

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர

07ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் கடத்தல், வழிப்பறி, கொலை, கொள்ளை

அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

03ஆம் பக்கம் பார்க்க

## பெற்றோல், டீசல் இன்று முதல் விநியோகம்

05ஆம் பக்கம் பார்க்க

பொருட்களின் விலைகள் பன்மடங்கு அதிகரிப்பு

# நாட்டில் விரைவில் பஞ்சம் ஏற்படும் அபாயம்

## உணவின்றி பலர் பட்டினியால் மரணிப்பர்

(கொழும்பு)
பொருட்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளதால் நாட்டில் விரைவில் பஞ்சம் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. இதனால் பலர் உணவின்றி பட்டினியால் மரணிப்பர்.

அத்தியாவசிய பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இதனால் அடிப்படைத் தேவைகளைக்கூட நாட்டில் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பொதுமக்கள் கஷ்டப்படுகின்றனர்.

எரிபொருள், எரிவாயு விலையேற்றம் காரணமாக அனைத்துப் பொருட்களின் விலைகளும் சடுதியாக பல மடங்கு அதிகரித்துள்ளன.

அரிசி மற்றும் 04

அடுத்த 3 வாரங்கள் கடினமானவை

# எரிபொருள், எரிவாயுவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும்



விசேட உரையில் பிரதமர் ரணில்

(கொழும்பு)
அடுத்த 3 வாரங்கள் நாட்டுக்கு மிகவும் கடினமானவை. எரிபொருள், எரிவாயுவுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்படும். நாட்டு மக்கள் அனைவரும் அர்ப்பணிப்புக்கு தயாராகுங்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)



சமூக வலைத் தளங்களில் பலரால் பகிரப்பட்ட புகைப்படம்.

கிளிநொச்சியில்

## குளவி கொட்டியதில் 25 மாணவர்கள் பாதிப்பு

(முறிகண்டி)
கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் குளவிக்கூடு கலைந்ததமையால் 25 மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 11 பேர் அவசர சிகிச்சை பிரிவில் 04

## கடும் உணவுத் தட்டுப்பாடு இலங்கையில் ஏற்படும் அபாயம்

உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை

(கொழும்பு)
கடும் உணவுத் தட்டுப்பாடு மற்றும் அதிகரித்துச்செல்லும் விலையேற்றம் காரணமாக எதிர்வரும் மாதங்களில் இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மேலும் மோசமடையும் என உலக உணவுத் திட்டமும் ஐக்கிய 04

## இலங்கையில் பலர் வேலையிழப்பர்

பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)
பணவீக்கம் கடுமையாக அதிகரித்து வருகின்றமை காரணமாக எதிர்காலத்தில் பல துறைகளில் வேலை இழக்கும் 04

## எரிபொருளுக்காக மீண்டும் நீண்ட வரிசை



04

## லிட்ரோ எரிவாயு விநியோகம்

இன்று இடம்பெறாது

(கொழும்பு)
இன்றைய தினம் லிட்ரோ எரிவாயு கொள்கலன் விநியோகம் இடம்பெறாது 04

முல்லை அளம்பிலில்

## குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், குருசோட் வீதி, சுண்டிக்குளியில் மரியன்னை பேராலய சூழலில் புனித பத்திரிசியார் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, புனித பரியோவான் கல்லூரிக்கு அண்மையில் 1 1/2 பரப்பு காணியில் புதிதாக கட்டப்பட்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம் : காலை 10.30 - மாலை 5.30

(11793)

076 554 4939, 070 654 4939

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## விற்பனைக்கு

Box bar 3" x 3"
(2.00 mm)

தொடர்பு

(11786)

077 832 1677

இயங்காத நிலையில் உள்ள அனைத்துவிதமான தொலைபேசிகளும் கொள்முதல் செய்யப்படும்.

A.R.K MOBILE SHOP

No.62, Hospital Road, Jaffna.

(மரக்கறிச் சந்தைக்கு முன்பாக)

(C-4453)


## தர்ம பரிபாலன சபை

## பொதுக்கூட்ட அறிவித்தல்

## 2022

**பொதுச்சபை உறுப்பினர்கள்,**
**அழகொல்லை விநாயகர் ஆலயம்,**
**அளவெட்டி.**


எமது ஆலய தர்ம பரிபாலன சபைப் பொதுக் கூட்டமானது 2022.06.19ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி 12.30 மணிவரை நடைபெற இருப்பதனால் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொண்டு நடைமுறை விதிப் பிரகாரம் புதிய தர்ம பரிபாலன சபை தெரிவினையும் மேற்கொண்டு உதவுமாறும் கூட்டத்தில் பரிசீலிப்பதற்குரிய பிரேரணைகளை வழங்க விரும்புபவர்கள் 12.06.2022 ஆம் நாளிற்கு முன்னர் வழங்கியுதவுமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
அழகொல்லை விநாயகர் ஆலயம்

(11787)

## மரண அறிவித்தல்

பிறப்பு
31 . 07 . 1958



இறப்பு
06 . 06 . 2022

### சூசைப்பிள்ளை சகாயரட்ணராசா(ராதா)

சக்கோட்டை அல்வாய் வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராதா என்று அழைக்கப்படும் சூசைப்பிள்ளை சகாயரட்ணராசா அவர்கள் நேற்று முன்தினம் (06.06.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகனும் இராசரத்தினத்தின் அன்பு மைத்துனரும் செபமாலை அம்மாவின் அன்புச் சகோதரரும் சத்தியவதியின் பாசமிகு கணவரும் ஜக்குலின், காலஞ்சென்ற ஜான்சன் மற்றும் குயின்ரன், நிரோஜன், நிரஞ்சன், நிஸாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியமுகுந்தன், அனுஷா, ஜேன் பவித்திரா, ஜோதிகா, குகாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும் வசீகரன், ஆரூரன், அருவி, காருண்யா, கவின்யா, பாரினியன், மித்ரன், நீர்ஜா, ஸாகித்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க நிகழ்வு இன்று (08.06.2022) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பழைய வேதக் கோவிலடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சக்கோட்டை,
அல்வாய் வடமேற்கு.

076 733 5866

(C-4457)

தகவல்:
குடும்பத்தினர்

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04 - 02 - 1960

உதிர்வு
23 - 05 - 2018



மலர்வு
25 - 12 - 1986

அமரர்
**மயில்வாகனம் ஜெகநாதன்**

அமரர்
**ஜெகநாதன் சஞ்சீவன்**

**திதி - 08.06.2022**

எல்லோருக்கும் அன்பாளர்,
இனியர், சிறந்தோர் பண்பாளர்
அறிஞருக்கு அறிஞர், ஆற்றலர்
சமுதாய முன்னேற்றம் நாடிய தொண்டர்,
பண்பாளர், நல்லதோர் கூட்டுறவாளர்,
தொலைபேசியில் ஓர் நுட்பவியலாளர்,
ஊருக்கும் உறவுகளுக்கும் உத்தமர்.

தந்தையும் தனயனும் இனிய நற்தோழராய்
விளங்கியோர், எல்லோரும் போற்றத்தக்க
நாள்தோறும் பயணித்து குடும்பத்திற்காக உழைத்தவர்,
எல்லோர் இதயங்களிலும் மலர்ந்தவர்.

எதிர்பாராத ஒரு நொடிப் பொழுதில் மின்னல் போல்
எங்களை விட்டு பிரிந்தீரே
ஒரு பொழுது ஏனும் உங்களை நினைக்காத நாளில்லை
ஆண்டுகள் நான்கு சென்றாலும் ஆறாது
எம் துயரம்
ஒரு தடவையேனும் எங்களை பார்த்து
செல்வீர்களா?

(11752)

கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
☎-077 533 7406

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

வானகம் போன் சிற்றி
இல : 64/121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
( சம்பத் வங்கி முன்பாக )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் ஏமாற்றப்படலாம்

## அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை!

**(கொழும்பு)**

**நாடு முழுவதும் கடத்தல், வழிப்பறி, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, துப்பாக்கிச்சூடு என மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளமையினால் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கீழ்க்குறிப்பிடும் செயற்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்து மாறும் மக்களிடம் கோரிக்கை விடுத் துள்ளனர்.

வீடுகளில் இருக்கும் மக்கள் கதவு, ஜன்னல்களை பூட்டி வீட்டிற்குள் அவதானமாக இருக்கவும்,

வாகனங்கள் தொடர்பிலும் அவ தானமாக இருக்கவும், வெளி நபர் களை வீடுகளுக்குள் அனுமதிக்க வேண்டாம், உதவி கேட்டு, மின் சாரத் தடை தொடர்பில் அல்லது அதிகாரிகள் என கூறி வீடுகளுக்கு வரும் நபர்கள் தொடர்பில் அவதா னமாக இருக்கவும் நகைகள் அல்லது பெறுமதியான பொருட்களுடன் வெளியே நடமாடுவதனை தவிர்க்க வேண்டும், இரவு நேரத்தில் வீடு களின் பாதுகாப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள், கையடக்க தொலை பேசியின் இ.எம்.ஐ இலக்கத்தை பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

வெளிநாட்டில் இருந்து வந்த நபர்கள் அவதானமாக இருங்கள், உங்களுக்கு பெறுமதியான பரிசு வெளிநாட்டில் இருந்து வந்துள்ளதாக கூறி வரும் நபர்களை வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம், பேருந்து களில் புதிய நபர்கள் பழக்கம் ஏற்படுத்த முயற்சித்தால் அதனை தவிர்த்துக் கொள்ளுங்கள், பேருந் தில் பைகள் வழங்கினால் பெற்றுக் கொள்வதனைத் தவிர்த்து அவ தானமாக இருங்கள், நீங்கள் ஏமாற் றப்படலாம். ஏமாற்றுக்காரர்களினால் குறிவைக்கப்படலாம் என பொலி ஸார் ஒலிபெருக்கி ஊடாக மக்களை எச்சரித்து வருகின்றனர். (நி)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 15 பரப்பு காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

**பார்வையிடும் நேரம்**

**காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை**

ஒரு பரப்பின் விலை - **மூன்று இலட்சம்**

**தொடர்பு:- 076 658 3621, 076 436 5814**


# மரண அறிவித்தல்

## திருமதி சத்தியபாமா லிங்கப்பிள்ளை (மணியம்மா)



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு இராமசீமான் கோவில் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா லிங்கப்பிள்ளை (மணியம்மா) அவர்கள் நேற்று (07.06.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - சிவயோகம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ் சென்ற லிங்கப்பிள்ளையின் மனைவியும் காலஞ்சென்ற சாந்தியின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான தட்சணாமூர்த்தி (முத்துச்சாமி), அருணகிரிநாதர் (செல்லத்துரை), சித்தாலட்சுமி, பத்மநாதன் (பாலு) ஆகி யோரின் அன்புச் சகோதரியும் இலட்சுமிஅம்மா மற்றும் காலஞ்சென்ற முத்துலட்சுமியின் மைத்துனியும் காலஞ் சென்றவர்களான வைகுந்தவாசன், துளசிவாசன் மற்றும் உருத்திராவதி, காலஞ்சென்ற இலட்சாவதி மற்றும் திருப்பதி வாசன், சிறிரங்கவாசன், காயஸ்திரி, சத்தியநாராயணன், தாட்ஷாயினி, திருமகள், காலஞ்சென்ற திருவருள் மற்றும் திருவாசுகி, திருவருட்செல்வன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.06.2022) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காடா கடம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமசீமான் கோவில் வீதி, ஏழாலை தெற்கு, ஏழாலை. (C-4456)

தகவல்: [illegible] (மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

இதில் செம்மலையினை சேர்ந்த 41 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் அளம்பில் பகுதியில் வீட்டில் தந்தையுடன் வசித்து வந்த வேளை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்று இரவு வீட்டிற்கு சென்ற இருவர் குறித்த நபரை அழைத்து தாக்குதல் நடத்தியுள்ளார்கள். இதன்போது தலையில் படுகாயமடைந்த குறித்த நபர் நிலத்தில் வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## குளவி கொட்டி...

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் குரங்குகளின் நடவடிக்கையால் குளவிக்கூடு கலைந்துள்ளது. இதன் காரணமாக பாடசாலை விட்டு வெளியேறுகின்ற நேரத்தில் பல மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்கள் உடனடியாக சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளரின் வாகனத்தில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ம-7,100,316)

## லிட்ரோ...

பெறமாட்டாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

12.5 கிலோ, 5 கிலோ மற்றும் 2.3 கிலோ நிறையுடைய லிட்ரோ எரிவாயு கொள்கலன்கள் இன்று விநியோகிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில நாட்களில் மீண்டும் எரிவாயு விநியோகம் மீள ஆரம்பிக்கப்படும் என்றும் லிட்ரோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## இலங்கையில்...

அபாயம் உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொழில் வழங்கும் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குரிய போதிய வருமானம் இல்லாததால் இந்த நிலை ஏற்படலாம் எனக் கூறப்படுகின்றது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக, நாட்டின் பல துறைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## எரிபொருளுக்...

யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தில் பல இடங்களில் எரிபொருளுக்காக நீண்டவரிசையில் பொதுமக்கள் காத்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள் இல்லை எனக்கூறி மூடப்பட்டு காணப்பட்டமையை அவதானிக்க முடிந்ததுடன் ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டது.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று வாரங்களுக்கு எரிபொருள் நெருக்கடி நிலை ஏற்படலாம் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்படலாம் என்ற போலியான தகவல்கள் பரவின.

இந்தநிலையில் பொதுமக்களும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதியம் முதல் எரிபொருள் நிரப்புவதற்கு முண்டியடித்த நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டு காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் இதுவரை எந்தவிதமான உத்தியோகபூர்வமான தகவல்களும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாட்டில் விரை...

உணவு தட்டுப்பாடு காரணமாக எதிர்காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என பொருளாதார நிபுணர்களும் எச்சரித்துள்ளனர்.

பொருட்களின் கடுமையான விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் வாழ முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. (ம-7)

## எரிபொருள்...

பாராளுமன்றில் நேற்று ஆற்றிய விசேட உரையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் அனைவரும் எரிபொருள் மற்றும் எரிவாயுவை முடிந்தவரை கவனமாக உபயோகப்படுத்த வேண்டிய நேரம் இதுவாகும். அதற்காக பயணங்களை முடிந்தவரை மட்டுப்படுத்த வேண்டும்.

எனவே, இந்தக் காலகட்டத்தில் தேவையில்லாமல் எரிபொருள் மற்றும் எரிவாயுவை பதுக்குவதையும் தவிர்க்குமாறு அனைத்து குடிமக்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

வரப்போகும் கடினமான மூன்று வாரங்களுக்குப் பிறகு, எரிபொருள் மற்றும் உணவை சிரமமின்றி வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம். பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

கடினமான மூன்று வாரங்களுக்குப் பிறகு, எரிபொருள் மற்றும் எரிவாயுவை தட்டுப்பாடு இல்லாமல் வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம். இந்த கடினமான மூன்று வாரங்களை பொறுமையாக எதிர்கொள்வோம்.

நம் நாட்டின் வருடம் ஒன்றிற்கான அரிசியின் தேவை 2.5 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். ஆனால் எங்களிடம் 1.6 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி மாத்திரமே கையிருப்பில் உள்ளது. இந்த நிலை நெல் மற்றும் பல பயிர்களுக்கும் பொதுவானது.

அதனால், சில மாதங்களில் உணவு விடயத்தில் கடும் சிரமங்களை சந்திக்க வேண்டியிருக்கும். நமது அன்றாட உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். அதற்கு ஒரு மாதத்திற்கு 150 மில்லியன் டொலர் அளவில் செலவாகும்.

ஆகையால், அழிந்து வரும் விவசாயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கடும்...

நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் ... அறிக்கை வெளியிட்டுள்ளது.

வருமானம் குறைந்துள்ளமை மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றம்என்பன போதிய அளவு உணவு உட்கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக உலக உணவு பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகின் பட்டினி அபாய நாடுகள் மற்றும் அடுத்த மூன்று மாதங்களில் மிக மோசமான உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்ளும் நாடுகள் என இந்த அறிக்கை பெயரிடப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் உணவுப் பொருட்களுக்கான செலவுகள், எண்ணெய் மற்றும் இறக்குமதிப் பொருட்களின் விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமை, நாணய மாற்று விகிதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி என்பனவற்றினால் 2022ஆம் ஆண்டில் இலங்கையில் பணவீக்கம் மேலும் அதிகரித்துச்செல்லுமென அந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஜூன் மற்றும் செப்ரெம்பர் காலப்பகுதிக்குள் இலங்கையின் உணவுக்கான பற்றாக்குறை ஏற்படுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)


தன நிதானய
திகதி - 2022.06.07
சீட்டிழுப்பு இலக்கம் - 809
L 18 22 65 79

மஹஜன சம்பத
திகதி 2022/06/07
சீட்டிழுப்பு இலக்கம் 4779
T 8 2 6 4 0 5
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.07
சீட்டிழுப்பு இலக்கம் 088
கன்னி 15 24 36 52 கன்னி

மெகா பவர்
திகதி 07/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1127
E 02 01 04 53 65

கொவிசெத
திகதி 2022.06.07
சீட்டிழுப்பு இலக்கம் 3021
F 47 53 68 77
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1257
விருச்சிகம் 2 7 8 1 5 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1754
சீட்டிழுப்பு திகதி 2022.06.07
நிறம் இள நீலம்
தினம் செவ்வாய்க்கிழமை
F 18 33 59 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,130,780/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.07
சீட்டிழுப்பு இல : 3915
வர்ணம் : இள நீலம்
ரூ. 2,820,680/-
வெற்றி இலக்கங்கள் 12 32 50 57 F

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 180
சீட்டிழுப்பு திகதி 2022.06.07
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 19 20
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,531,400/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2022-06-07
வெற்றி வாரம் 3466
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 28 51 54 55
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,530,780/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 34 01 08 15 24
சீட்டிழுப்பு வாரம் 930
திகதி 2022.06.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 240,842,005/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1580
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.06.07
ரூ. 3,292,520/-
வெற்றி இலக்கங்கள் 04 09 22 36 Z


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை காரணமாக
# நீர் மின் உற்பத்தி அதிகரிப்பு
## இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

**(கொழும்பு)**
**நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் பெய்துவரும் பலத்த மழை காரணமாக நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது.**

அதற்கமைய, நீர் மின் உற்பத்தியிலிருந்து 48 வீதமான மின்சாரம் தேசிய கட்டமைப்பில் தற்போது இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர், பிரதி பொது முகாமையாளர் அன்ரூ நவமணி குறிப்பிட்டார்.

அனல் மின் உற்பத்தியினூடாக 44 வீதமான மின்சாரம் மற்றும் காற்றாலை மின் உற்பத்தியினூடாக 10 வீத மின்சாரமும் தேசிய கட்டமைப்பில் இணைக்கப்படுவதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் கடந்த சில தினங்களாக பலத்த மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதால், நீர் மின் உற்பத்தியினூடாக போதுமானளவு மின்சாரத்தை தேசிய கட்டமைப்பில் இணைப்பதற்கு இயலுமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சப்புகஸ்கந்த A மற்றும் B அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கான மசகு எண்ணெய் கிடைத்துள்ளது.

எரிபொருள் இன்மையால், பத்தல மற்றும் வடக்கு ஜனனி மின் உற்பத்தி நிலையங்களில் மின்சார உற்பத்தியை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# இன்று முதல்
## பெற்றோல், டீசல் விநியோகம்

(கொழும்பு)
டீசல் மற்றும் பெற்றோல் பங்குகள் இன்று முதல் விநியோகிக்க உள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி வழமை போன்று நாளை முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 5000 மெட்ரிக் தொன் பெற்றோல் விநியோகிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு 3500 மெட்ரிக் தொன் டீசல் விநியோகிக்கப்படும் என்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போதே எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனை தெரிவித்துள்ளார். (நி)

# ஆயுதம் தாங்கிய படையினர் நாடு முழுவதும் கடமையில்
## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)
நாடு முழுவதும் ஆயுதம் தாங்கிய படையினரை கடமையில் ஈடுபடுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் 40 ஆவது அதிகாரத்திற்கு அமைவாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தொடர்பாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்றத்திற்கு அறிவித்தார். (நி)

# நிமல் சிறிபால டி சில்வா நீக்கம்
## நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு

(கொழும்பு)
சுதந்திரக் கட்சியின் பதவியில் இருந்து நிமல் சிறிபால டி சில்வாவை நீக்கியதை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவை கட்சியின் சகல பதவிகளில் இருந்தும் நீக்குவதாக அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்தார்.



இதனை எதிர்த்து நிமல் சிறிபால டி சில்வா கொழும்பு மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி ஊடாக இந்த தீர்மானத்திற்கு தடை கோரி மனுவொன்றை தாக்கல் செய்தார்.

சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம் அவரை பதவியில் இருந்து நீக்குவதற்கு தலைவருக்கோ, பொதுச் செயலாளருக்கோ, மத்திய குழுவுக்கோ அதிகாரம் இல்லை என நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. (நி)


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திரு. இ. மங்களேஸ்வரன் அவர்களின் பாசமிகு தந்தையார்
அமரர்.
**நல்லையா இராசலிங்கம்**
அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்.
(c-4449)


# இராசிபலன்

08.06.2022
வைகாசி 25, புதன்கிழமை
நவமி பின்னிரவு 3.59 மணிவரை
உத்தரம் பின்னிரவு 12.41 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை
சந்திராஷ்டமம் - அவிட்டம், சதயம்

வளவன்


**மேஷம்**
மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.


**ரிஷபம்**
பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.


**மிதுனம்**
யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.


**கடகம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், வருமானம் திருப்தி தரும்.


**சிம்மம்**
புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் வந்தடையும்.


**கன்னி**
ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய அனுபவங்கள் ஏற்படும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


**துலாம்**
தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.


**விருச்சிகம்**
எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


**தனுசு**
கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப ஒற்றுமை கூடும் நாள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.


**மகரம்**
அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், வழிபாட்டால் ஆர்வம் கூடும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் வாய்ப்புண்டு.


**கும்பம்**
கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.


**மீனம்**
உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

வீணாக உன்னையே நிர்பந்தங்களுக்கு உள்ளாக்கிக் கொள்ளாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு நேற்று முதல் மண்ணெண்ணெய்



(யாழ்ப்பாணம்)
கமநல சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் எரிபொருள் அட்டைகளுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசனின் அறிவுறுத்தலில் கமநலசேவைகள் திணைக்களம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

அந்தவகையில் நேற்று கரவெட்டி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கமநல திணைக்களத்தினால் 3330 லீற்றர் மண்ணெண்ணெய் கட்டவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிலையத்தின் மூலமாக வழங்கப்பட்டது. (4-6-33-60)

# மோ.சைக்கிளில் வந்தோரால் இரண்டு பவுண் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டச் வீதிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தனது பிள்ளையை பாடசாலைக்கு விடச் சென்ற பெண்ணின் இரண்டு பவுண் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்தோரால் அபகரிக்கப்பட்டுள்ளது.

34 வயதான குறித்த பெண் தனது பிள்ளையை பாடசாலையில் இறக்கி விட்டு மோட்டார் சைக்கிளில் வேம்பிராய் பகுதி ஊடாக வீடு திரும்பிய போது பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தென்மராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக வழிப்பறி மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# விறகு விற்பனை செய்து வாங்கிய 10 கிலோ அரிசி திருட்டு

## குடத்தனையில் சம்பவம்

(கரணவாய்)
வயோதிபர் ஒருவரின் 10 கிலோ அரிசியை திருடர்கள் பறித்துச் சென்ற சம்பவம் குடத்தனை பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முதியவர் ஒருவர் குடத்தனை பகுதியில் இருந்து விறகு சேகரித்துக்கொண்டு பருத்தித்துறையில் விற்பனை செய்து விட்டு பத்து கிலோ அரிசி வாங்கிக்கொண்டு திரும்பவும் குடத்தனை நோக்கி பயணித்தார்.

வல்லிபுர கோயிலுக்கும் குடத்தனைக்கும் இடைப்பட்ட வெளிப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முதியவரின் 10 கிலோ அரிசியை பறித்துக் கொண்டு ஓடி மறைந்துள்ளனர். (4-6-60)



தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கதிர்காமம் நோக்கி பாத யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இராணுவத்தினர் சிற்றுண்டி வழங்கி வைத்திருந்தனர்.

# தேங்காய் திருடன் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் தொடர் தேங்காய் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் காளிகோவில் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார்.கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக நாட்டில் களவு உள்ளிட்ட சட்ட விரோதச் செயற்பாடுகள் வெகுவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30)



யாழ்.மாவட்டத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் உள்ள இடையூறுகள், பிரச்சினைகள் தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாண வணிகர் கழகத்தினரின் ஏற்பாட்டில் மேற்படி வணிகர் கழகப் பணிமனையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் உள்ளூர் உற்பத்தியாளர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டதுடன் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடினர். (படம்-ரவிசாந்)

# வீட்டின் மீது தாக்குதல் சந்தேகத்தில் இருவர் கைது

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி இயற்றாலைப் பகுதியில் உள்ள வீடொன்றிற்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தேக நபர்கள் இருவர் கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 31ஆம் திகதி வரணி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த ஒலி பெருக்கி சாதனங்கள்,வீட்டின் கண்ணாடி ஆகியவற்றை சேதமாக்கி தீ மூட்டிய சந்தேகத்தின் பேரிலே குறித்த இருவரும் கைதாகியுள்ளனர். கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-30)

## சுகாதார விஞ்ஞானங்கள் பீட

# புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வுகள் நாளை 09 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில், பீடாதிபதி திருமதி. தெய்வி தபோதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும், பெற்றோரும் நிகழ் நிலையூடாக இந் நிகழ்வில் கலந்து கொள்ள முடியும்.

நிகழ்வுக்கான இணைப்புகள் புதுமுக மாணவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல், மற்றும் கைத்தொலைபேசிக் குறுந் தகவல்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், இணைப்புகள் கிடைக்காதவர்கள் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி அலுவலகத்தின் 021 320 5486 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பீடாதிபதி திருமதி. தெய்வி தபோதரன் அறிவித்துள்ளார். (4-6-33)

# அல்வாயில் சிறுமியை கடத்த முயற்சித்தவர் தப்பி ஓட்டம்

(கரணவாய்)
அல்வாய்ப் பகுதியில் பேர்த்தியாருடன் உறங்கிக் கொண்டிருந்த 4 வயதுச் சிறுமியை கடத்த முயற்சித்த ஒருவர் பேர்த்தியாரின் கூக்குரலினால் சிறுமியை விட்டு தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் கடந்த 6 ஆம் திகதி இரவு கட்டைப்புளியடி அல்வாய் மேற்கு அல்வாய் சிவானந்தா விளையாட்டு மைதானத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் பேர்த்தியாருடன் குறித்த சிறுமியும் அவரது சகோதரனும் உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது நள்ளிரவு 12.20 மணியளவில் சிறுமியை ஒருவர் தூக்கி வைத்திருப்பதை பேர்த்தியார் அவதானித்து சகோதரன் தூக்கியுள்ளார் என நினைத்து பதற்றமடையாமல் இந்த நேரத்தில் ஏன் தூக்கி வைத்திருக்கிறாய் படுக்க வைக்கவும் என கூறியபடி முகத்தை அவதானித்துள்ளார்.

குறித்த நபர் முகமூடி அணிந்திருப்பதை அவதானித்து குழந்தையை பறிக்கும் முயற்சியில் கூக்குரல் இட்டுள்ளார். இதனையடுத்து சிறுமியை விட்டு விட்டு குறித்த கடத்தல்காரர் தப்பி வீட்டின் வாசல் பக்கமாக ஓட அருகில் இருந்த கம்பி ஒன்றால் எறிந்துள்ளார். இருப்பினும் அவர் தலைமறைவாகியுள்ளார். சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த கடத்தல்காரர் அப் பகுதியில் உள்ள 4 வீடுகளுக்கு சென்றதுடன் 4 வீட்டிலும் சிறுவர்களை கடத்துவதற்கு முயற்சி செய்துள்ளார் இருப்பினும் முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டன. (4-6-60)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டெம்பர் மாதம் வரை அரிசி கையிருப்பில் உள்ளது

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை நாட்டில் அரிசி கையிருப்பில் உள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டால் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு பின்னர் அது ஏற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஆளும் கட்சிக் குழுக் கூட்டத்திலேயே தெரிவித்துள்ளார்.

அறுவடை போதுமானதாக இல்லாவிட்டால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

## உணவு நெருக்கடி

# விலங்குகளை சரணாலயங்களில் விடுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் உணவுப் பிரச்சினை ஏற்படும் பட்சத்தில், அதிகளவான விலங்குகளை கொடூரமான விலங்குகள் நடமாடாத சரணாலயங்களில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய விலங்கியல் பூங்காவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திலக் பிரேமகாந்த அறிவித்துள்ளார்.

மிருகக்காட்சிசாலையில் ஒரு இனத்தைச் சேர்ந்த நான்கு விலங்குகளை மாத்திரம் மக்கள் பார்வைக்கு வைத்தல் போதுமானது. வனவிலங்கு திணைக்களத்தின் அனுமதியுடன் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பகுதிகளுக்கு மான் போன்ற விலங்குகள் விடுவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டெண்டர் மூலம் விலங்குணவு வழங்கியவர்களுக்கு பணம் கொடுக்க மிருகக்காட்சிசாலையில் பணம் இல்லை. எனவே உணவு வழங்குபவர்கள் பணம் செலுத்தும் வரை உணவு வழங்குவதை தாமதப்படுத்துகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், உணவுப் பிரச்சினைக்குத் தீர்வாகவும், பணத்தை மிச்சப்படுத்தவும் நீண்ட காலமாக மிருகக்காட்சிசாலை மிருகங்களுக்கு வழங்கி வந்த விலையுயர்ந்த உணவு வகைகளுக்கு பதிலாக மாற்று உணவு வகைகளை வழங்கி வருகின்றோம்.

அதன்படி, அப்பிள், தோடம் பழங்களை உண்ணும் விலங்குகளுக்கு கொய்யா போன்ற பழங்களும், விலை உயர்ந்த சூரியகாந்தி தானியங்களுக்கு பதிலாக பறவைகள் சாப்பிடும் சிறிய தானியங்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் தேசிய விலங்கியல் பூங்காவின் பணிப்பாளர் கூறியுள்ளார்.

விலங்குகளுக்கு உணவளிக்க விரும்புபவர்களுக்கு உலர் உணவு, புலிக் குட்டிகளுக்கு பால் மா மற்றும் மிருகக்காட்சிசாலையில் உள்ள யானைகளுக்கு கரும்பு போன்ற பொருட்களை வழங்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மின்வெட்டு நேரத்தில் மாற்றம்

(கொழும்பு)

தற்போது அமுல்படுத்தப்படும் மின்வெட்டில் சில மாற்றங்களைச் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி, மூன்று நாட்களுக்கு ஒருமுறை காலை அல்லது இரவில் இரண்டு மணி நேரம் 15 நிமிடம் மாத்திரம் மின்வெட்டு அமுல்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுபாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர்,

தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1968 கிறிஸ்தவம் R.C
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை கோழிப்பண்ணை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/10049

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 16 சூரி 6 செவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: சொந்த நகை வேலை செய்யும் கடை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10054

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 27 சூரி 12 செவ் 11 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BA பட்டதாரி (அரச உத்தியோகம்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்
தொ.இ: B/10057

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 1
கி.பா: சூரி 11 செவ் 7 இல்
தகைமை/தொழில்: சாரதி
எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/10059

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: சூரி 11 செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BA நூலகர்
எதிர்பார்ப்பு: சொந்தத்தொழில் விவாகரத்தானவர்
தொ.இ:G/10329

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 13 சூரி 6 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: கல்வியற்கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/10331

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 53 சூரி 10 செவ் 07 இல்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: BSc உதவிக்கணக்காளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/10343

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 24 சூரி 10 செவ் 9 இல்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: BBA (தனியார் நிரந்தரம்)
எதிர்பார்ப்பு: கணக்காளர், பொறியியலாளர்
தொ.இ: G/10351

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் ____ ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2020/2021**
**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2022 (12ம் பிரிவு)**

மேற்படி குறித்த பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப்பரீட்சையானது எதிர்வரும் 18.06.2022 (சனிக்கிழமை) மதியம் 02.00 மணி தொடக்கம் 03.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் 15.06.2022 (புதன்கிழமை) மற்றும் 16.06.2022 (வியாழக்கிழமை) ஆகிய நாட்களில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021-222-3612) தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(C-4454)

# பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் கழிக்கப்பட்ட இரும்பு பொருட்களை பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்தல்

சங்கத்தில் இருந்து கழிக்கப்பட்ட இரும்பு பொருட்கள் கெண்டேனர் பெட்டி-6, அறுவடை இயந்திரம் உட்பட பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| | |
|---|---|
| காலம் | - 25.06.2022, சனிக்கிழமை |
| ஜெயபுரம் வளாகத்தில் | - காலை 9.00 மணிக்கு |
| வாடியடி காரியாலய வளாகத்தில் | - நண்பகல் 12.00 மணிக்கு |

குறித்த இரும்பு பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. 1, 2 என இலக்கமிடப்பட்ட கெண்டேனர் பெட்டிகள்-வாடியடி அலுவலக வளாகத்திலும், 3, 4 என இலக்கமிடப்பட்டது ஜெயபுரம் அரிசி ஆலையிலும் 5, 6 என இலக்கமிடப்பட்டது ஜெயபுரம் அலுவலக வளாகத்திலும் உள்ளது.

இவற்றை உரிய இடங்களில் பார்வையிட்டு கொள்ளலாம். ஏனைய பொருட்கள் தலைமை அலுவலகத்தில் பார்வை இட்டு கொள்ளலாம். மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்றைய தினமே கேள்வியாளர் அதற்குரிய பெறுமதியை செலுத்தி பொருட்கள் அப்புறப்படுத்த வேண்டும். அல்லது 50 வீதம் முற்பண வைப்பு செய்ய வேண்டும்.

**தலைவர்,**
**பூநகரி ப.நோ.கூ.சங்கம்,**

(C-4450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 65

# பேராசை பெரும் நட்டம்



ஒரு காட்டில் வாழ்நாள் முழுக்க வேட்டையாடி அலுத்துப் போன புலி ஒன்று ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தது. அங்கே ஒரு எறும்பு வேலைக்குச் சேர்ந்தது. அது பாட்டுக்கு வரும், சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் செய்து முடித்திட்டு மாலை ஆனதும் வீட்டுக்குப் போய் விடும். புலியாருக்கு ஏக சந் தோசம். கணிசமான இலாபமும் கிடைத்தது.

நல்லாத்தான் போய்க் கொண்டு இருந்தது. நடு ராத்திரியில் திடீர் என்று புலியாருக்கு ஒரு ஐடியா தோன்றியது. எறும்பு தனியாகவே வேலை செய்யுதே. அதை கண்காணிக்கிற அளவுக்கு நமக்கும் போதுமான அறிவு இல்லை, நாம் எறும்பை கண்காணிக்கவும் ஆலோசனை சொல்லவும் ஒரு உற்பத்தி மேலாளரை நியமித்தால் உற்பத்தி அதிகமாகும் என்று ஒரு தேனீயை கொண்டு வந்தது.

அந்த தேனீயும் வேலையில் ஒரு புலிதான் போல. பல கம்பனிகளில் வேலை செய்த அனுபவசாலி (இப்போ அந்த கம்பனியெல்லாம் இருக்குதா என்று கேட்க்காதீர்கள்). அந்த தேனீ சொன்னது, "பாஸ் எறும்பை அதன் போக்கில விட முடியாது. அதுக்கு முறையான வேர்க் ஷெடியூல் போட்டுக் கொடுத்தால் இன்னும் கூடுதலாக வேலை வாங்கலாம். அதற்கு நிறைய வேலை இருக்கு. எனக்கு ஒரு செக்ரட்ரி வேணும் என்று கேட்டது.

புலிக்கு ஏக சந்தோசம். இந்த தேனீ எப்படியெல்லாம் யோசிக்குது. நமக்கு இவ்வளவு நாளாக இது தோன்றவில்லையே என்று ஒரு முயலை செக்ரட்டரியாக்கியது. அதோட புலியார் நமக்கும் கொஞ்சம் தெரியும் என்று காட்டிக்கொள்ள, "ஆள் போட்டாச்சு, இனிமேல் எனக்கு தினமும் வேலை முன்னேற்றம் குறித்து ரிப்போர்ட் வரைபடமாகவும் அட்டவனையாகவும் கொடுக்க வேண்டும்" என்று சொன்னது.

"ஓகே சேர் அதுக்கென்ன, பிரமாதமாக செய்திடலாம். அதுக்கு ஒரு கம்பியூட்டர், பிரின்டர், புரெஜெக்டர் எல்லாம் வேணும் என்றது, அப்படியே வாங்கி, ஒரு கம்பியூட்டர் டிப்பார்ட்மெண்டும் பூனை ஒன்றின் தலைமையில் ஆரம்பித்தது.

இப்போது ஏகப்பட்ட கெடுபிடி, நெருக்கடிகளால் விரக்தியடைந்த அந்த எறும்பினுடைய வேலையில் ஒரு தொய்வு வந்தது. உற்பத்தி குறைந்தது. புலி நினைத்தது எல்லாம் சரியா இருந்தும் ஏன் இப்படி? தேனீயோட ஐடியாக்களை எறும்புக்கு விளக்கமாக எடுத்துச்சொல்ல ஒரு தொழில்நுட்ப ஆலோசகரை போடுவோம் என்று ஒரு குரங்குக்கு அந்த வேலையை கொடுத்தது. ஏற்கனவே டல்லான எறும்பை இப்போது குரங்கும் அதன் பங்குக்கு குழப்ப அன்றைய தினத்துக்காக திட்டமிடப்பட்ட வேலைகளை அன்றைக்கே முடிக்காமல் போனது எறும்பு. மேலும் உற்பத்தி குறைவு நட்டத்தில் இயங்கியது. "எதைத்தான் தின்றால் பித்தம் தெளியும" என்ற மனநிலைக்கு ஆளான புலியார் நட்டத்தை சரி செய்ய என்ன செய்லாம் என்று ஆராய ஆந்தையை நியமித்தது. ஆந்தை மூன்று மாத ஆராய்ச்சிக்கு பின் கடைசியாகச் சொன்னது, "தொழிற்சாலையில் தேவைக்கு அதிகமாக ஆள் இருப்பதே காரணம், யாரையாவது வேலையை விட்டு எடுத்து விட்டால் நிலைமை ஓரளவு சீராகும்" என்றது.

"யாரை எடுக்கலாம் அதையும் நீயே சொல்லிடு" என்றது புலி. "அதிலென்ன சந்தேகம் சரியாக வேலை செய்யாத அந்த எறும்பைத் தானே" அதிரடியாக சொன்னது ஆந்தை.

இப்படித்தான் உலகெங்கும் பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளில் எதுவும் செய்யாமலே படம் காட்டுபவனும் ஜால்ரா அடிப்பவனும் திருட்டு த்தனம் செய்பவனும் வெறும் வாயால் வேலை செய்பவனும் பிழைத்துக் கொள்கிறான். வேறெதுவும் தெரியாது வேலையை மட்டுமே செய்பவன் பாதிப்புக்கு உள்ளாகிறான்..

subarmaneam ketheeswra

## செர்பியாவிற்கான ரஷ்ய தூதுவரின் விமானம் நேட்டோ நாடுகளினால் தடுப்பு




(மொஸ்கோ)

செர்பியா நாட்டுடன் நடைபெறவிருந்த உத்தியோக பூர்வ சந்திப்பு குறிப்பிட்ட திகதியில் நடைபெறாது என்ற அறிவிப்பை மொஸ்கோ நேற்று காலை அறிவித்துள்ளது.

மேற்படி சந்திப்பினை மேற்கொள்வதற்காக ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கை லவ்ரோவ் ஆயத்தமாகியிருந்த நிலையில், அவர் பயணம் செய்யவிருந்த விமானத்தின் பயண பாதையில், நேட்டோ நாடுகளின் விமானங்கள் இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றமை கண்காணிக்கப்பட்ட நிலையில், மேற்படி பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# உ

# திருட

# ரஷ்ய

# ஐரோ

(வோஷிங்டன்)
**ரஷ்யாவின் போரி
முழுவதும் பரவி வரு
உயர்த்துகிறது, மக்க
முழு பிராந்தியங்களை
நெருக்கடிக்கு ரஷ்யா
சபைத் தலைவர் சார்ல**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு உலகளாவிய உணவு நெருக்கடிக்குக் காரணம் என்று ஐரோப்பிய சபையின் தலைவர் சார்லஸ் மைக்கேல் குற்றம் சாட்டியதை அடுத்து, ஐ.நா. பாதுகாப்பு சபையின் கூட்டத்தில் இருந்து ரஷ்யாவின் ஐ.நா. தூதர் வசிலி நெபென்சியா வெளியேறினார். நியூயோர்க்கில் நடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின்

## வாரத்திற்கு 4 நாட்கள் வேலைத் திட்டம்

# பிரித்தானியாவில் அமுல்

(லண்டன்)

நான்கு நாட்கள் வேலை வாரம் திட்டத்தை சோதனை அடிப்படையில் பிரித்தானியா நடை முறைப்படுத்தியுள்ளது.

70 நிறுவனங்களைச் சேர்ந்த 3,300 தொழிலாளர்கள் நான்கு நாட்கள் வேலை வாரத் திட்ட சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

நான்கு நாட்கள் வேலை வாரம் திங்கட்கிழமை முதல் எவ்வித சம்பளக் குறைப்பும் இல்லாமல் நடைமுறைப்படுத்த நிறுவனங்கள் முடிவு செய்திருக்கின்றன.

ஆறு மாதங்களுக்கு சோதனை அடிப்படையில் திட்டத்தை செயல்படுத்த உள்ளதாகவும், மன அழுத்தம், சோர்வு, வேலை மற்றும் வாழ்க்கையில் ஏற்படும் திருப்தி உள்ளிட்டவைகளை கூடுதல் நாள் விடுமுறை மூலம் பணியாளர்கள் கையாள்வதை ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் பாஸ்டன் கல்லூரி ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து, இலாப நோக்கற்ற 4 நாட்கள் வேலை வாரம் திட்டம் சோதனை நடத்தப்படுகிறது. (நி)

# நம்பிக்
# பிரித்தா



(லண்டன்)

சொந்த கட்சிக்குள்
எழுந்தபோதும், பார
கொண்டு வரப்பட்
வாக்கெடுப்பில் பிரித்
போரிஸ் ஜோன்
பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம்
கொண்டுவரப்பட்ட ந
கெடுப்பில் 59 சதவீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருட்களை
# ட்டு ஏவுகணையாக
# ா பயன்படுத்துகிறது
## ரோப்பிய சபைத் தலைவர் சாடல்

**ாரின் வியத்தகு விளைவுகள் உலகம் வருகின்றன. இது உணவு விலைகளை க்களை வறுமையில் தள்ளுகிறது மற்றும் களையும் சீர்குலைக்கிறது. இந்த உணவு யா மட்டுமே பொறுப்பு என ஐரோப்பிய ார்லஸ் மைக்கேல் குற்றம் சாட்டினார்.**




போது கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய சபையின் தலைவர் சார்லஸ் மைக்கேல், 'ரஷ்ய கூட்டமைப்பின் தூதர், நேர்மையாக இருக்கட்டும். வளரும் நாடுகளுக்கு எதிராக ரஷ்யா உணவுப் பொருட்களை ஒரு திருட்டு ஏவுகணையாகப் பயன்படுத்துகிறது.

ரஷ்யாவால் அமுல்படு த்தப்பட்ட கடற்படை முற்றுகையின் காரணமாக உக் ரைனின் ஒடேசா துறை முகத்தில் சிக்கிய மில்லியன் தொன் கணக்கான தானியங்களை தானே 'பார்த்ததாக' தெரிவித்தார்.

உக்ரைனின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ரஷ்யா தானியங்களைத் திருடி பயிர் நடவு மற்றும் அறுவடை செய்வதைத் தடுப்பதாகவும் மைக்கேல் குற்றம் சாட்டினார். இந்த கருத்துக்கள் நெபென்சியாவை வெளியேற்ற வழிவகுத்தது. அவர் வெளி யேறும்போது, மைக்கேல் அவரிடம் நேரடியாக உரையாற்றினார்.

உக்ரைன் சமையல் எண்ணெய், சோளம் மற்றும் கோதுமை போன்ற தானியங்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறது.

ரஷ்யாவும் அதிக அளவு தானியங்கள் மற்றும் உரங்களை ஏற்றுமதி செய்கிறது. இந்த ஏற்றுமதி இல்லாததால் மாற்றுப் பொருட்களின் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பிக்கை வாக்கெடுப்பில்
# தானிய பிரதமர் வெற்றி



...க்குள்ளேயே எதிர்ப்பு ... பாராளுமன்றத்தில் ...ரப்பட்ட நம்பிக்கை ... பிரித்தானிய பிரதமர் ...ஜான்சன் வெற்றி

...தினம் திங்கட்கிழமை ...ட்ட நம்பிக்கை வாக் ... சதவீத வாக்குகளை பெற்று போரிஸ் ஜோன்சன் தன் பதவியை தக்க வைத்துள்ளார்.

இருப்பினும், அவருடைய தலைமைத்துவத்திற்கு எதிராக சொந்த கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு எழுந்ததால், அவரின் அதிகாரம் வலுவிழந்திருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் போரிஸ் ஜோன்சனின் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த மொத்தம் உள்ள 359 பாராளுமன்ற உறுப்பினர்களில், 211 பாராளுமன்ற உறுப்பினர்கள் போரிஸ் ஜோன்சனுக்கு ஆதரவாகவும் 148 பாராளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு எதிராகவும் வாக்களித்தனர்.

2019 ஆம் ஆண்டில் பிரதமராக பதவியேற்ற போரிஸ் ஜோன்சன், 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம், கொவிட் முடக்க நிலையை மீறி பிறந்த நாள் விருந்தில் கலந்து கொண்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. அத்துடன் அபராதமும் விதிக்கப்பட்டது.

இதன்மூலம், பிரித்தானியாவின் பிரதமராக ஆட்சியில் உள்ள ஒருவர் மீது சட்டத்தை மீறியதாக அபராதம் விதிக்கப்படும் முதல் பிரதமராக அவர் ஆனார்.

மேலும், வரி உயர்வு, வாழ்க்கைச் செலவுகள் உயர்வு மற்றும் அரசு கொள்கைகள் மீதும் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர். இந்த நிலையில் அவர் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு கொண்டுவரப்பட்டது. (நி)

# ரஷ்யாவின் உயர்மட்ட இராணுவத் தளபதி உக்ரைனின் தாக்குதலில் உயிரிழப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவின் உயர்மட்ட இராணுவத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் ரோமன் குடுசோவ், உக்ரைன் துருப்புக்களால் கொல்லப்பட்டதாக ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது.

உக்ரைனின் டோன்பாஸ் பகுதியில் உள்ள குடியிருப்பு ஒன்றின் மீது தலைமையேற்று தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த போது அவர் கொல்லப்பட்டதாக 'ரோசியா 1' என்ற ரஷ்ய அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை 12 ரஷ்ய ஜெனரல்களைக் கொன்றுள்ளதாக உக்ரைன் கூறுகிறது.

குறைந்தபட்சம் 7 மூத்த ரஷ்ய இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டதாக மேற்கத்தேய நாடுகளின் உளவு அமைப்புகள் கூறுகின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாபய கடற்படை முகாமுக்காக பொதுமக்களின் காணி சுவீகரிப்பு

## மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

(முல்லைத்தீவு)

**வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாமுக்காக நேற்று பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.**




முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் பொதுமக்களின் காணிகளில் அமைந்துள்ள "கோட்டாபய கடற்படை கப்பல்" என்னும் கடற்படை முகாமுக்கு காணிகளை நிரந்தரமாக சுவீகரிப்பதற்கு நில அளவை திணைக்களத்தினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக வட்டுவாகல் பகுதியில் கடற்படை முகாம் அமைந்துள்ள 617 ஏக்கர் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளை கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக சுவீகரிப்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறுநிலஅளவைதிணைக்களத்தினரின் ஒத்துழைப்போடு அளவீடு செய்து காணி சுவீகரிப்புக்கு கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை மக்கள் தமது எதிர்ப்பு போராட்டங்களால் முறியடித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காணிகளை சுவீகரிப்பதற்காக நில அளவை திணைக்களம் மற்றும் கடற்படையினர் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டிருந்த நிலையில் காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் நில அளவை திணைக்கள வாகனத்தை கடற்படை முகாமுக்குள் செல்ல விடாது கடற்படை முகாம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அளவீட்டு முயற்சிகள் தடுக்கப்பட்டன.(4-7)

## வாள்வெட்டுக்குழு அட்டகாசம்



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடி கிராமத்தில் வாள்வெட்டு குழுவினரின் அட்டகாசம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பளை பிரதேச முல்லையடி கிராமத்தில் நேற்று அதிகாலை 2.10 மணியளவில் இரு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேரை கொண்ட குழுவொன்று வீடு ஒன்றை சேதப்படுத்தியதுடன் பெற்றோல் குண்டும் வீசி விட்டு சென்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பளை பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (4-6-316)

## இயக்கச்சி திரியாய் அம்பாள் திருக்குளிர்த்திப் பொங்கல்

(தருமபுரம்)

இயக்கச்சி முகாவில் திரியாய் அம்பாள் (பர்வதவர்த்தினி) தேவஸ்தான திருக்குளிர்த்தி பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட அபிஷேக ஆராதனைகளும் காவடி, பாற்செம்பு, தீச்சட்டி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன் நிறை வேற்றலும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-6-316)



வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய பொங்கல் உற்சவத்தையொட்டிய தீர்த்தமெடுக்கும் வைபவும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதம் நிறைந்த வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய தீர்த்தம் எடுக்கும் குறித்த உற்சவம் முல்லைத்தீவு தீர்த்தக்கரை பகுதியில் சிறப்பாக இடம்பெற்றது.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த மூன்று வருடங்களின் பின்னர் இம்முறை ஆயிரக்கணக்கான அடியவர்கள் இந்த உற்சவத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிபரை நியமிக்குமாறு மாணவர்கள் போராட்டம்



(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் அமைந்துள்ள விசுவமடு விஸ்வநாதன் ஆரம்பபாடசாலையில் மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுத்தனர்.

பாடசாலையில் ஒரு வருட காலமாக பாடசாலை அதிபர் இல்லாமல் தாங்கள் சீரான முறையில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது உள்ளதாக தெரிவித்தே பாடசாலையில் இருந்து வெளிநடப்பு செய்து குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரியநடவடிக்கையினை மேற்கொண்டு அதிபர் ஒருவரை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மாணவர்கள் தெரிவித்தனர். (4-6-316)

## மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைதாகி பிணையில் விடுவிப்பு



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் அனுமதி பத்திரத்துக்கு முரணான வகையில் நேற்று முன்தினம் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இரண்டு டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகள் இருவரையும் தருமபுர பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.(4-316)

## மாற்று வலுவுடையோருக்கான ஆசன ஒதுக்கீடு

### மன்னாரில் விழிப்புணர்வு நிகழ்வு

(மன்னார்)

பொது போக்குவரத்தில் மாற்றாற்றல் உடையவர்களுக்கான ஆசன ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தக்கோரி விழுது அமைப்பின் அனுசரணையில் தேனீ மாற்றாற்றல் அமைப்பினரால் விசேட விழிப்புணர்வு நிகழ்வு மன்னார் பிரதான பேருந்து நிலையத்தில் இடம்பெற்றது

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமேல், விழுது அமைப்பின் மாவட்ட இணைப்பாளர், தேனீ அமைப்பின் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் ஸ்ரிக்கர்களையும் காட்சிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (4-285)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமெடுக்கும் டெங்கு நோயாளர்கள்

## கொழும்பு மாவட்டத்திற்கு எச்சரிக்கை விடுத்த உலக சுகாதார அமைப்பு

**கொழும்பு**

**உலக சுகாதார அமைப்பு கொழும்பு மாவட்டத்திற்கு டெங்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.**



ஜூன் 5 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் இலங்கையில் 2052 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் அதிகபட்சமாக மேல் மாகாணம் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் 1050 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக கடந்த வாரம் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்திருந்தார். இந்த ஆண்டில் மொத்தம் 18,782 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவித்த அவர் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# எரிபொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்தவர் கைது

(கொழும்பு)

அனுமதிப்பத்திரம் இன்றி அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய - கங்கேயாய பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து 42 லீற்றர் பெற்றோல், 28 லீற்றர் டீசல் மற்றும் 42 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, பதுக்கி வைக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களைத் தேடி நேற்று முதல் கொழும்பு உட்பட பல நகரங்களில் விசேட சுற்றிவளைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி)

# மண்ணெண்ணெய் வழங்கக் கோரி ஹற்றனில் போராட்டம்



(ஹற்றன்)

மண்ணெண்ணெய் விநியோகத்தில் தமது பிரதேசத்துக்கு அநீதி இழைக்கப்படுவதாகக் கூறி ஹற்றன் பிரதேசவாழ் மக்கள் நேற்றுக் காலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக வீதியில் அமர்ந்து அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக ஹற்றன் தலவாக்கலை மார்க்கம் மற்றும் ஹற்றன் பொகவந்தலாவை மார்க்கங்களில் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது. (நி)

# நீதி இல்லாத நாட்டில் பயங்கரவாதம் உருவாகிறது

## கல்கந்தே தம்மானந்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நீதி இல்லாத நாட்டில் பயங்கரவாதம் உருவாகின்றது என பௌத்த கற்கைநெறிகளிற்கான வல்பொல ராகுல நிறுவகத்தின் தலைவர் கல்கந்தே தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் காடையர்கள் போன்ற பௌத்த மதகுருமார்களை வளர்த்து ஊக்குவித்து பல்வேறு இடங்களில் அவர்களைக் பயன்படுத்தியது என கல்கந்தே தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நீதி இல்லாத நாட்டில் பயங்கரவாதம் உருவாகின்றது. பொறுப்புக்கூறல் என்பது அரசமைப்பிலோ அல்லது நீதித்துறையிலோ உள்வாங்கப்படவுமில்லை, சேர்க்கப்படவுமில்லை.

நல்லிணக்கம் என்பது செயலமர்வுகளை நடத்துவது, அறிக்கைகளை வெளியிடுவது, டொலர்களை பெற்றுக்[illegible]தில்லை. சமூகத்தின் [illegible]களை ஆற்றாவிட்டால் குடும்ப வன்முறை, துன்புறுத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன அதிகரிக்கும் என தெரிவித்துள்ள பௌத்தமதகுரு தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களும் சிங்கள பௌத்த கொள்கையை பயன்படுத்தியுள்ளன.

இந்த அரசாங்கம் சிங்கள பௌத்த கவசத்தை தனது நல[illegible] தெரி[illegible]வித்துள்ளார். (நி)

# துறைமுக நகர முதலீட்டாளர்களுக்கு 40 வருட வரிச்சலுகை

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 40 வருடங்கள் வரை வரிச் சலுகை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்களை கவரும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரத்திற்கு பெறப்பட்ட வெளிநாட்டு முதலீடு ஒரு பில்லியன் டொலர்கள் என்பதுடன், இலங்கையில் ஒரு திட்டத்திற்காக பெறப்பட்ட அதிகூடிய வெளிநாட்டு முதலீடு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை விதிப்பு



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை நேற்று விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான இரண்டாவது வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 210 | 220 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 500 | 600 |
| தக்காளி | 800 | 750 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 150 | 140 |
| கோவா | 350 | 300 | 280 | 350 |
| கரட் | 200 | 350 | 350 | 400 |
| பூசணி | 160 | 150 | 120 | 160 |
| புடோல் | 280 | 200 | 240 | 300 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 450 | 500 | 600 | 600 |
| பெரிய வெங்காயம் | 230 | 210 | 200 | 220 |
| பாகற்காய் | 700 | 700 | 700 | 800 |
| வெண்டைக்காய் | 200 | 200 | 160 | 350 |
| கருணைக் கிழங்கு | 240 | 240 | 140 | 220 |
| பயற்றங்காய் | 250 | 350 | 300 | 240 |
| லீக்ஸ் | 240 | 240 | 280 | 300 |
| பீற்றூட் | 360 | 300 | — | 400 |
| கறிமிளகாய் | 400 | 450 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 900 | 1600 |
| போஞ்சி | 800 | 700 | 700 | 700 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 70 | 60 | 80 | 120 |
| தேசிக்காய் | 600 | 500 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 600 | — | — |
| முள்ளங்கி | 160 | 200 | — | 360 |
| பொன்னாங்கண்ணி | 80 | 70 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | — | 200 | — | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மன்னாதி மன்னன்



(நேற்றைய தொடர்ச்சி)

இதுபோல ரமணனின் மேலதிகாரி, துணை மந்திரி, மந்திரி என்று யாவரும் அமுதனைப் பிடிக்கப் போய் அபராதம் செலுத்த வேண்டியதாயிற்று. அவர்களும் மாதா மாதம் குறிப்பிட்ட தொகையை அமுதனுக்குச் செலுத்தி வந்தனர்.

இந்த விபரங்கள் எல்லாம் மன்னனுக்குத் தெரிந்தது. எனவே அமுதனைக் காண அவனே சென்றான். அமுதனும் அவனை வணங்கினான். மன்னனும் உன்னைப் பற்றி நிறையக் கேள்விப் படுகிறேன். எல்லோரையும் பயமுறுத்தி நடுங்க வைக்கும் நீ எனக்கு இவ்வளவு மரியாதை செலுத்துகிறாயே" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்டான். அமுதனும் "நான் இப்போது மன்னர்க்கும் மன்னன்" எனவே மானசிம்மனும் "ஆம் உன்னிடம் மாபெரும் சக்தி உள்ளது. எல்லோரையும் பயமுறுத்தி நடுங்க வைக்கும். நீ மன்னாதி மன்னன்தான்" என்றான். அமுதனும் "நீங்கள் மன்னராக இருப்பதால் வரி வசூலிக்கிறீர்கள். பொக்கிஷம் காலி என வரியை உயர்த்துகிறீர்கள். ஆனால் அது ஏன் காலி ஆயிற்று என்று யோசித்துப் பார்த்தீர்களா? பொக்கிஷப் பணம் அநியாயக்காரர்களிடமும் ஊழல் அதிகாரிகளிடமும் போய்ச் சேர்ந்து விட்டது" என்றான். மன்னனும் "என் ஆட்சியில் ஊழலா? இல்லவே இல்லை" எனவே அமுதன் "அப்படியானால் உங்கள் மந்திரிகளும். அதிகாரிகளும் வியாபாரிகளும் எனக்கு பயந்து பணம் ஏன் கொடுத்து வருகிறார்கள்?" என்று கேட்டான். அப்போதுதான் மன்னனுக்கு ஆட்சியின் நிலை என்னவென்று புரிந்தது. அவன் அமுதனிடம் "ஆமாம். நீ சொல்வது சரியே, இப்போது என் ஆட்சியில் ஊழல் மலிந்துதான் இருக்கிறது" என்றான். அப்போது அமுதன் தன்னிடமுள்ள மோதிரத்தின் சக்தியைக் கூறவே மன்னன் அந்த மோதிரத்தைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டினான். அமுதனோ "நான் கொடுக்க மாட்டேன். இது எனக்குப் பிறகு என் வம்சத்தவரிடம் இருக்கும். நான் ஊழலைக் களைந்து விட்டேன். இனியாவது ஊழல் நடக்காமல் பார்த்துக் கொள்வதாக எனக்கு வாக்குக் கொடுங்கள்" என்று கூறி மன்னனிடம் அந்த வாக்குறுதி பெற்றுக் கொண்டு கிளம்பினான். ஆனால் வழியில் அவன் அந்த மோதிரத்தை ஒரு குளத்தில் வீசி எறிந்து விட்டான். வேதாளம் இக்கதையைக் கூறி "மன்னா! மக்கள் நலனைக் கருதும் அமுதன் அந்த மோதிரத்தை மன்னனிடம் ஏன் கொடுக்கவில்லை? அந்த மோதிரத்தை வைத்துக் கொண்டு அவனே நாட்டின் மன்னனாகக்கூட ஆகி இருக்கலாமே. மோதிரம் தன் குடும்பத்தாரிடம் இருக்கும் என அமுதன் கூறி விட்டு அதனை ஏன் குளத்துள் விட்டெறிந்தான்? இக்கேள்விகளுக்குச் சரியான விடை தெரிந்திருந்தும் நீ கூறா விட்டால் உன் தலை வெடித்துச் சுக்குநூறாகி விடும்" என்றது. விக்கிரமனும் "அமுதன் மக்களுக்கு நன்மை புரிய வேண்டும் என்ற நோக்கில் தான் தலைநகருக்கு வந்தான். மன்னனாக வேண்டும் என்றல்ல. மன்னன் மந்திர பலத்தால் ஆட்சி புரியாமல் முறையாக ஆட்சி புரிய வேண்டும் என்பதற்காகவே அமுதன் அந்த மோதிரத்தை மன்னனிடம் கொடுக்கவில்லை. தனக்குப் பின் தன் குடும்பத்தில் வருவோரும் தன்னை போல நேர்மையாக இருப்பார்களா? என நினைத்தே எதற்கு விஷப் பரீட்சை என எண்ணி அமுதன் மோதிரத்தைக் குளத்தில் விட்டெறிந்தான், அவன் அவ்வாறு செய்ததும் சரியே" என்றான். விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்த உடலோடு வேதாளம் உயரக் கிளம்பிப் போய் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




இராவணனை அவன் அத்தாணி மண்டபத்தில் நேருக்கு நேர் சந்தித்தான்; அனுமன் அவனைக் காணும் வாய்ப்புக்கு அகமகிழ்ந்தான்; அவனைக் கொல்வதற்கும் வெல்வதற்கும் இராமன் ஒருவனால்தான் முடியும் என்பதைக் கண்டான்; விரைவில் விடுபட்டு இராமனுக்குச் செய்தி சொல்ல விரும்பினான்; அஸ்திரத்தை முறித்துக் கொண்டு வெளிவருவது வேத விதிக்கு முரணாகும்; அதனால் பொறுத்திருந்தான்; "கட்டுண்டோம் காலம் வரும்" என்று காத்திருந்தான்.

"தூதுவனாய் வந்த நீ துயர் விளைவிக்கும் அழிவினை ஏன் செய்தாய்?" என்று இலங்கையர் கோன் கேட்டான். "கட்டுக் காவல் மிக்க உன்னைச் சந்திக்க, இதுதான் வழி எனக் கண்டேன்; அரச மரியாதையுடன் உன் ஊர்ப் பெருமக்கள் ஊர்வலம் நடத்தி என்னை உன்னிடம் அழைத்து வந்தனர்" என்றான்.

அவன் ஆணவப் பேச்சைக் கேட்ட அரசன், அவனைக் கொல்லுமாறு ஆணையிட்டான்.

பாரதக் கதையில் துரியோதனன் அருகில் துச்சாதனன் இருந்தான்; வேடிக்கை பார்க்கும் வீரன் கர்ணன் இருந்தான்; தடுத்துப் பேச ஒரு விதுரன் தான் அங்கு இருக்க முடிந்தது.

இங்கே வீடணன் விதுரனாய்ச் செயற்பட்டான்.

"மாதரையும் தூதுவரையும் கொல்வது அரச நீதியாகாது" என்று சாத்திரம் அறிந்த அவன், நீதியை எடுத்து உரைத்தான்.

இந்திரஜித்து, பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டவன், வெட்டுண்பது வேத நெறி ஆகாது; அதனால் வேறு கயிறுகளைக் கொண்டு கட்டுமாறு கட்டளையிட்டான் இராவணன்.

அவனைக் கொல்வதைவிட அவன் வாலை ஒட்ட நறுக்குவதே தக்கது என்றான்.

நம் வீரத்தை மாற்றாரிடம் விளம்ப அவனைத் திரும்ப அனுப்புவதே மேல் என்று விளக்கம் கூறினான்.

தங்கையை இராமலக்குவர் அங்கபங்கப்படுத்தியது போல, இவன் வாலுக்கு நெருப்பு வைப்பதே உகந்தது என்று கூறினான்.

மந்திரத்தின் கட்டு அவனைவிட்டு நீங்கியது.

மாந்தரின் கட்டு அவனைக் கட்டியது; வீதி தோறும் அவன் இழுத்துச் செல்லப்பட்டான்; அப் பொன்னகரின் எழிலும் பரப்பும் அவன் காண முடிந்தது.

நகரத்தின் நடுப் பகுதியில் அவனை நிற்க வைத்தனர், அவன் வாலுக்குத் துணி சுற்றி அதில் நெருப்பு வைத்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.
– ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள மக்களே உங்கள் மௌனம் எதற்கானது?

நாடு சீரழிந்துவிட்டது. இந்த ஆட்சியாளர்கள் இருக்கும்வரை பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாதென்பது உறுதி.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரிக்கின்றன.

அத்தியாவசியப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலைகளை அரசாங்கம் தளர்த்திவிட, அவரவர் தாம் தாம் நினைத்தபாட்டில் விலைகளை உயர்த்திக் கொள்கின்றனர்.

இந்தநிலைமை நாட்டை நிர்மூலமாக்கப் போகிறது. பட்டினிச்சாவை ஏற்படுத்தப் போகிறது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்று நாட்டுக்கு நாசத்தையும் மக்களுக்கு மோசத்தையும் செய்துவிட்டார்.

உண்மை. இப்போதெல்லாம் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போயுள்ளன.

கொடியவர்களின் ஆட்சியில் நாட்டில் தரித்திரம் தாண்டவமாடும் என்ற நம் முன்னவர்கள் கூறிவைத்த தத்துவம் அரங்கேறி நின்று சன்னதம் ஆடுகிறது.

அந்தோ! கெட்டவர்களின் ஆட்சியில் நடப்பதெல்லாம் நீசமாகவே நடக்கிறது.

இல்லையென்றால், ரஷ்ய விமானம் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவு ரஷ்யாவின் கோபத்துக்கு இலங்கையை ஆளாக்குகிறதா என்ன?

ஆக, நல்லது என்று எடுக்கின்ற காரியமெல்லாம் பாதகமாய் அமைகிறது என்றால், அதற்கான காரணம் என்ன என்பதை ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

அன்புக்குரிய சிங்கள மக்களே! இதே ஆட்சி இதே அரசாங்கம் இந்த நாட்டில் இருக்குமாயின் மக்கள் பட்டினியால் மாண்டு போவதைத் தவிர வேறு எதுவும் நடக்காது.

ஆகவே இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மிகமோசமான பேரவலத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதாயின் உடனடியாக அரசாங்கத்தைக் கலைத்து பிரதம நீதியரசரின் தலைமையில் நேர்மையான – புத்திஜீவிகளைக் கொண்டதான அரச நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

அதைச் செய்வதற்கு ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்து பிரதம நீதியரசர் தலைமையிலான அரச கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

ஒட்டுமொத்தப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவிகளை இராஜினாமாச் செய்யாத வரை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தனது பதவியில் இருந்து விலகமாட்டார்.

எனவே ஆட்சியை அகற்றுகின்ற பெரும் பொறுப்பு அதனை அமைத்த சிங்கள மக்களிடமே உண்டு.

ஆகையால் சிங்கள மக்கள் ஜனநாயக ரீதியில் – அகிம்சை வழியில் ஆட்சியைக் கலைக்கின்ற போராட்டத்தை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

போராட்டம் தாமதமாகின்ற ஒவ்வொரு கணமும் போராட்டத்தை முன்னெடுக்க முடியாத அளவில் வறுமையும் பஞ்சமும் ஆட்கொண்டு விடும்.

ஆக, நிலைமையை உணர்ந்து சிங்கள மக்கள் செயலாற்ற வேண்டும்.

## இந்தியாவிடமிருந்து மேலும் 55 மில்லியன் அமெ.டொலர் கடன்

(கொழும்பு)

2022/23 பெரும் போகப் பயிர்ச்செய்கைப் பருவத்திற்கான யூரியா உரத்தை கொள்வனவு செய்வதன் பொருட்டு, எக்ஸிம் என்ற இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கியிடமிருந்து 55 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிதியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளதாக இலங்கை அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற ரீதியில் இதற்கான உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

## அதிகமான பொருட்களை கொள்வனவு செய்வதால்

### அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பினைப் பேண முடியாதுள்ளது

(கொழும்பு)

உணவுப் பொருட்களை அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்து வீடுகளில் சேமிக்க வேண்டாம் என்றும் இவ்வாறான செயற்பாடுகளால் சந்தைகளில் அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பினை வழமையைப் போன்று பேண முடியாது என்றும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் தமக்கு தேவையான உணவுப் பொருட்களை தேவையானளவிற்கு கொள்வனவு செய்ய முடியும். அதனை விடுத்து அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்தால் அது சந்தைகளில் அத்தியாவசியப் பொருட்களின் வழமையான இருப்பினைப் பேணுவதில் பாதிப்பை ஏற்படுத்தும்.

வழமையாக நவம்பர் அல்லது டிசெம்பர் மாதங்களில் அரிசி இறக்குமதி செய்யப்படும்.

எனினும் இவ்வாண்டு இப்போதே அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் 6 - 7 மாதங்களுக்கு அரிசி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை.

பொருட்களின் விலை அதிகரிப்பிற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அனுமதியைக் கோர வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே தளர்த்தப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் விலை அதிகரிப்புக்கள் எந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை வினவும் அதிகாரம் நுகர்வோர் அதிகார சபைக்கு உண்டு.

அதற்கமைய லாப்நிறுவனம் எந்த அடிப்படையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை அதிகரித்தது என்பது குறித்து விளக்கம் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

## பாராளுமன்ற உணவகத்திலும் விலைகள் எகிறியது

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலைக்கு மத்தியில் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து வருகின்றன.


இவ்வாறான நிலையில் பாராளுமன்ற உணவகத்திலும் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 9 ஆம் திகதி வியாழன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** நாரந்தனைமத்தி, நாரந்தனை மேற்கு ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், மன்னார் நீர் வழங்கல் சபை, கடற்படைமுகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக்கம் பெனி பிரைவேட் (லிமிடெட்) (கடல் உணவு களஞ்சியம்), பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ், தலைமன்னார், தப்ரோபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), தலைமன்னார் மருத்துவமனை, தலைமன்னார் கடற்படைமுகாம், வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, பேசாலை-ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி, ஜோசப்வாஸ் நகர், கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம் கீழியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, ஓலைத்தொடுவாய், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப் பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு கடல்பக்கம், புதுக்குடியிருப்பு, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம் , தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தோட்டவெளி, துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

மிருக வேந்தனான சிங்கம் காட்டின் நடுவே தன்னந்தனியாக நடைபோடுவது போல் இருந்தது அந்தக் காட்சி. சிங்கம் தனிமையையே விரும்பும், தனிமையிலேயே உலவும். குருதேவரும் தம்முள் மூழ்கியவராக,யாரையும் சாராதவராக நடந்து கொண்டிருந்தார்.

ம- பிரமிப்புடன் நின்றவாறு அந்த மகாபுருஷரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்(ம-விடம்): 'ஏன் திரும்பி வந்தாய்?'

ம-: 'தாங்கள் கல்கத்தாவில் வரச் சொல்லியிருக்கும் வீடு பணக்காரர் வீடாக இருக்கலாமென்று தோன்றுகிறது. என்னை உள்ளே விடுவார்களோ என்னவோ? அதனால் வாரமல் இருப்பதே நல்லது என்று நினைக்கிறேன். இங்கு வந்தே உங்களை தரிசிக்கிறேன்.'

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'இல்லை இல்லை! ஏன் அப்படி நினைக்கிறாய்? என் பெயரைச் சொல். இன்னவரிடம் போக வேண்டும் என்று சொல் .யாராவது [illegible] வார்.'

ம- அப்படியே ஆகட்டும் என்று கூறி மறுபடியும் குருதேவரை வணங்கி விடைபெற்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 01

ரஷ்யாவுக்கு அடுத்து ஐரோப்பாவில் இரண்டாவது பெரிய நாடு உக்ரைன். பணக்கார நாடுகள் அதிகம் இருக்கும் ஐரோப்பாவிலேயே மிகுந்த ஏழ்மையான நாடு இது. வறுமைக்கோட்டுக்குக் கீழே நிறையப் பேர் வசிக்கும் ஐரோப்பிய நாடாகிய உக்ரைன் பனியும் குளிரும் சூழ்ந்த ஐரோப்பாவில் அதிகமான விவசாய நிலங்களைக் கொண்டுள்ளது. நான்கு கோடிக்கும் மேற்பட்டவர்கள் வசிக்கும் இந்தப் பெரிய தேசத்தை ரஷ்யா ஆக்கிரமிக்கப் பார்ப்பதுதான் தற்போது உலகின் முக்கிய செய்தி.

**ரஷ்யாவுக்கு அடுத்து ஐரோப்பாவில் இரண்டாவது பெரிய நாடுதான் உக்ரைன். நான்கு கோடிக்கும் மேற்பட்டவர்கள் வசிக்கும் இந்தப் பெரிய தேசத்தை ரஷ்யா ஆக்கிரமிக்கப் பார்ப்பதுதான் இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் உலகின் தலைப்புச் செய்தியாக இருந்தது.**

உக்ரைன் வெளி சக்திகளால் அடிபணியப்பட்ட மிக நீண்ட வரலாற்றையும், தேசிய சுதந்திரத்தின் மிகக் குறுகிய வரலாற்றையும் கொண்டுள்ளது. 1991 இற்கு முன்பு உக்ரைன் கடைசியாக சுதந்திரமாக இருந்ததைக் கண்டுபிடிக்க நீங்கள் வரலாற்றில் மிகவும் பின்னோக்கிச் செல்ல வேண்டும். முதலாம் உலகப் போருக்குப் பிறகு சில ஆண்டுகள் இருந்தன, அதற்கு முன் 1600 களில் சிறிது காலம் இருந்தது.

இந்த நாடு இடைப்பட்ட நூற்றாண்டுகளில் பெரும்பாலான ஆண்டுகளாக பகுதியாக அல்லது மொத்தமாக ரஷ்ய ஆட்சியின் கீழ் இருந்தது. இப் பெரிய பிரதேசத்தில் ஆறு உக்ரைனியர்களில் ஒருவர் உண்மையில் ரஷ்ய இனத்தவர் என்று கூறலாம். மூன்றில் ஒருவர் ரஷ்ய மொழியை அவர்களின் சொந்த மொழியாகப் பேசுகிறார். மற்ற மூன்றில் இரண்டு பேர் உக்ரைனிய பூர்வீகம் உள்ளவர்களாவர். மேலும் நாட்டின் பெரும்பாலான ஊடகங்கள் ரஷ்ய மொழியிலேயே உள்ளன.

இதனாலேயே ரஷ்யப் படைகள் உக்ரைனுக்குள் போவது ஒரு படையெடுப்பே இல்லை என்றும் எங்கள் நிலப்பரப்புக்குள் நாங்கள் போகிறோம் என்றும் நியாயப்படுத்துகிறார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

ரஷ்யாவைப் பற்றிய உக்ரைனியர்களின் பார்வை ஏன் இவ்வளவு பிளவுபடுகிறது என்று பார்த்தால் பல உக்ரைனியர்கள் தமது வரலாற்றை ஆதாரமாகக் காட்டி தமது பிரதேசத்தை மொஸ்கோ (ரஷ்யா) அடிபணிய வைத்திருந்ததாகப் பார்க்கிறார்கள். மற்றவர்கள் ரஷ்யாவை மிகவும் அன்பாக, பாரம்பரியம் மற்றும் வரலாற்றில் பகிரப்பட்ட உணர்வுடன் பார்க்கிறார்கள்.

நித்தம் ஒரு யுத்தம் கண்ட வரலாறு உக்ரைனுக்கு உண்டு. ஹிட்லருக்கே சவால் விடுத்தது இந்த உக்ரைன். இரண்டு உலகப் போர், உள்நாட்டு சண்டை, அண்டை நாடுகளின் ஆக்கிரமிப்பு என பல அபாயங்களில் இருந்து தப்பியது இந்த நாடு. நித்தம் ஒரு யுத்தம் கண்டதால் "போர் பூமி" என்றே அழைக்கப்பட்ட இந்நாடு தற்போது மீண்டும் ஒருமுறை துணிச்சலாக போரிடுகிறது.

உண்மையில் உக்ரைன் தேசத்துக்கு மாபெரும் வரலாறு உண்டு. 19 ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே தனிநாட்டுக்காக போராடி வருகிறது. 1918 இல் உக்ரைன் சுதந்திரத்தை அறிவித்தது. தற்போதைய உக்ரைனின் ஒருபகுதி உக்ரைனிய மக்கள் குடியரசாக (Ukrainian People's Republic-UPR) பிறந்தது. சிறிது காலத்திற்குப் பின் 1922 இல் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டு உக்ரைனிய சோவியத் சோசலிசக் குடியரசு உருவாக்கப்பட்டது. பல போராட்டக் குழுக்கள் தனிநாட்டுக்காக போராடி வந்துள்ளன. இறுதியில் 1991 இல் தனி நாடாகப் பிரிந்தது.

**தற்போதைய உக்ரைன் ஒரு தனி தேசமாக எப்போதும் இருந்ததில்லை. அது பல பிரதேசங்களாக பிரிந்தும் சேர்ந்தும் மாறி மாறி இருந்த ஒரு நாடாகும்.**

9 ஆவது நூற்றாண்டில் கீவியன் ரஸ் என்ற நாடு இருந்தது. இதன் தலைநகராக கீவ் (தற்போதைய உக்ரைன் தலைநகர்) இருந்தது. இங்கு உக்ரைன், ரஷ்யா, பெலாரஸ் உள்ளிட்ட பல்வேறு மொழிகள் பேசக்கூடிய மக்கள் கலந்து இருந்தனர். 980-1015 வரை கீவியன் ரஸ்சை வொலடிமிர் பெரிய இளவரசர் ஆட்சி செய்தார். உக்ரைன் மொழியில் 'வொலடிமிர்' என்று அழைக்கப்படுவதுதான், ரஷ்ய மொழியில் 'விளாடிமிர்' என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பெயர்களைக் கொண்டவர்களே தற்போது உக்ரைனையும் (ஜனாதிபதி வெலாடிமிர் ஜெலன்ஸ்கி) ரஷ்யாவையும் (ஜனாதிபதி விளாடிமிர் புடின்) ஆட்சி செய்து வருகின்றனர்.

1991 இல் சோவியத் யூனியன் சரிந்தபோது, உக்ரைன் சுதந்திரம் அடைந்தது. அப்போது, உக்ரைனிடம் 176 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், 1,249 அணு ஆயுதங்கள், ஏவுகணைகளை தாங்கி செல்லக்கூடிய 700 போர்க் கப்பல்கள் உட்பட ஏராளமான ஆயுதங்கள் இருந்தன. சுதந்திரம் அடைந்து 3 ஆண்டுகளுக்குப் பின், 1994 ஆம் ஆண்டு ரஷ்யாவிடம் அனைத்தையும் ஒப்படைத்து ஒரு ஒப்பந்தம் போட்டது. அப்போது, உக்ரைன் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் உறுதியளிக்கிறோம் என்று ரஷ்யா கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தில் இங்கிலாந்து, பெலாரஸ், கஜகஸ்தான் உள்ளிட்ட நாடுகள் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தை மீறியே உக்ரைனின் முதுகில் ரஷ்யா இப்போது குத்திக் கொண்டிருக்கிறது. இவ் வரலாறுகள் பற்றியே இக் கட்டுரை ஆராய்கிறது.

### உக்ரைன் என்ற பெயர் வரக் காரணம்

பல உக்ரைனிய வரலாற்று ஆய்வாளர்கள், உக்ரைனியா எனும் சொல்லை, தாய்நாடு, நம் நாடு என மொழி பெயர்த்தனர். அத்துடன், உக்ரைன் என்பதற்கு தனி அர்த்தம் வேண்டும் என்பதற்காக எல்லை நாடு எனவும் பரிசீலித்தனர். இறுதியாக, உக்ரைனிய மூலத்தின்படியும், வரலாற்றுச் சான்றுகளின்படியும், உக்ரைனின் பெயர்க் காரணம், எல்லைநாடு என ஒருமனதாக தீர்மானித்தனர்.

### தற்போதைய உக்ரைன்

உக்ரைன் என்பது கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு. ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக பரப்பளவில் ஐரோப்பாவின் மிகப்பெரிய நாடான உக்ரைன், ரஷ்யாவுடன் கிழக்கு மற்றும் வட-கிழக்கு எல்லைகளைக் கொண்டுள்ளது. உக்ரைன் வடக்கே பெலாரஸ்டனும் (Belarus) மேற்கே போலந்து (Poland), ஸ்லோவாக்கியா (Slovakia), ஹங்கேரி (Hungary) உடனும் தெற்கே ருமேனியா (Romania), மல்தோவா (Moldova) உடனும் கரையோரமாக அசோவ் கடல் (Sea of Azov), கருங்கடல் (Black sea) உடனும் எல்லைகளைக் கொண்டுள்ளது. உக்ரைனின் பரப்பளவு 603,628 சதுரகிலோ மீற்றர்கள் (233,062 சதுர மைல்கள்) ஆகும். மக்கள் தொகை 41.2 மில்லியன்.

**உக்ரைன் வடக்கே பெலாரஸ்டனும் (Belarus) மேற்கே போலந்து (Poland), ஸ்லோவாக்கியா (Slovakia), ஹங்கேரி (Hungary) உடனும் தெற்கே ருமேனியா (Romania), மல்தோவா (Moldova) உடனும் கரையோரமாக அசோவ் கடல் (Sea of Azov), கருங்கடல் (Black sea) உடனும் எல்லைகளைக் கொண்டுள்ளது.**

உக்ரைனின் ஒவ்வொரு நாட்டுடனான எல்லை நீளம்: பெலாரஸ் 1084 கிலோமீற்றர்கள் (674 மைல்கள்), ஹங்கேரி 137 கிலோ மீற்றர்கள் (85 மைல்கள்), மல்தோவா 1222 கிலோமீற்றர்கள் (759 மைல்கள்), போலந்து 529 கிலோ மீற்றர்கள் (329 மைல்கள்), ருமேனியா 614 கிலோமீற்றர்கள்(381மைல்), ரஷ்யா 2094 கிலோ மீற்றர்கள் (1,309 மைல்) மற்றும் ஸ்லோவாக்கியா 97 கிலோ மீற்றர்கள் (60 மைல்). உக்ரைன் 3,783 கிலோ மீற்றர்கள் (2,351 மைல்) கடற்கரையில் எல்லையாக உள்ளது. ரஷ்யாவுடனான எல்லை நாட்டின் மிக நீளமான எல்லையாகும் - இது அசோவ் கடல் வழியாக ஒரு பகுதியாக செல்கிறது. இது ஐரோப்பாவில் 8 ஆவது பெரிய மக்கள் தொகை கொண்ட நாடாகும். இதன் தலைநகர் கீவ்/கியேவ் ஆகும். இதன் ஆட்சி மொழி உக்ரைனியம் ஆகும். பெரும்பான்மை மக்கள் கிழக்கு மரபுவழிக் கிறித்தவர்கள் ஆவர்.




(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ
சிவார்ப்பணம்

அன்னை எனும் ஆலயத்தில் ஆண்டவனாய் அமைந்து...

2022 இல்...

# 7 ஆம் ஆண்டு நினைவு தனில்

# 17 ஆம் ஆண்டு நினைவு தனில்



அன்னை மடியில்
25.02.1950

ஆண்டவன் அடியில்
26.05.2015

அமரர்
திரு.

## நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி

திதி : வைகாசித் திங்கள் பூர்வபக்க நவமி
[ 08.06.2022 ]



அன்னை மடியில்
23.02.1951

ஆண்டவன் அடியில்
02.01.2006

அமரர்
திருமதி

## ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

திதி : மார்கழித் திங்கள் பூர்வபக்க திருதியை
[ 25.12.2022 ]

( ஜெகதா ஹாட்வெயர்ஸ் ஸ்தாபகரும் உரிமையாளரும், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் )

தாயுமானவரே!

மகோதயம் தனில் அன்னை
மணிவயிற்றில் வந்துதித்து!
மகமை கொண்டுயர்ந்து
மனுக்குலம் காத்தவரே!

மாட்சிமை கொண்ட உம்
மாமங்கலை முகம் காண,
மாசிரமாய்ச் சென்றீரே!
மாநிறைவு கொண்டீரோ!

மிகு புகழ் வாழ்வுதனில்
மேன்மையாய் வாழ்ந்திருந்தீர்!
மின்னும் சுடரெனவே
விண்ணில் ஒளிர்ந்து விட்டீர்!

மீக்கூர்த்து வழிந்து வீழும்
விழிநீர் மறையவில்லை!
மீட்சியில் பதம் அணைந்த முத்தரே!
மிளிர்வுடன் வாழ்ந்திடுமையா!

முருகையன் மூத்தவரை
முகம் கிளர்ந்து பணிந்திடுவீர்!
முன்னையோர் வழிநின்று
முற்றறிவு கொண்டுயர்ந்தீர்!

மூத்தவர் முகம் கண்டால்
முகம் மலர்ந்து நெகிழ்ந்து நிற்பீர்!
மூதாதையோர்முகம் காண
முதிர்ந்து கனிந்தீரோ!

மெய்ச்சும் முகம் காண
விரைந்து வென்று வந்து நிற்போம்!
மெய் மறக்கச் செய்திடுவீர்
மேன்மையான உம் செயலால்!

மேகமென வாழ்ந்திருந்தீர்!
வாடி நின்ற பல உயிர்க்கு!
மேலுலகம் வாழ்த்தி நிற்க!
மேக வண்ணன் தாளணைந்தீர்!

மைந்தரவர் தவித்து நின்று
மைவிளக்கு ஏற்றிநிற்க!
மைமல் வேளைதனில்
மாநிறைவு பெற்றுவிட்டீர்!

மொட்டவிழ்ந்த மலராக
மலர்ந்து நிற்கும் முகம் காண
முனைந்து நின்று தேடிவிட்டோம்
மொய்ம்புதனை இழந்துவிட்டோம்.

மோட்சமார்க்கம் பெற்றுவிட்டீர்!
மோன நிலை கொண்டுவிட்டீர்!
மோட்சதீபம் ஏற்றி நின்று
மோனமாய் வணங்குகின்றோம்.

மௌவை மகிழ்ந்திருக்க
மௌத்திகமாய் வந்துதித்தீர்!
மௌனியர் நிலை பெறவெனவே
மேலுலகம் புகுந்தீரோ!

அஃது நிச்சயம் கிடைத்திருக்கும்
உங்களது ஆருயிர்க்கு!
மகாதேவர்தான் உம்
அன்பு நேசர் ஆயிற்றே!

**ஐயனே! கொடிவழி பெருகும் போது**
**தாங்கள் நல் அறங்களும் தொடரும் என**
**அக்கினிப் பிளம்பென கொதித்து வழியும்**
**விழிநீரை சாட்சியாக்கி வாக்களிக்கின்றோம்!**

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

ஈர விழிகளுடன்
குடும்பத்தினர்

(31794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11784)

**076 825 7716** (ஆகாஸ்)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

**தரகர் தேவையில்லை** (11788)

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

**077 814 7389,**
**077 241 7589** - ஜெயம்



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவற்குழி சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 15 பரப்புக் காணி விற்பனைக்கு
நிலப்பரப்பு

- 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A9 வீதி முகப்புடன் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய பாரிய இடவசதி வீதியுடன் அமைந்துள்ளது.
- வியாபார நிலையங்கள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த நல்ல தண்ணீர் மேட்டுக்காணி.
- நாவற்குழி சந்தியிலிருந்து கைதடி செல்லும் வீதி முகப்புடன் லங்கா அசோக் லேடன் வாகன காட்சியறை நேரெதிரே அமைந்துள்ளது.




**பார்வையிடும் நேரம்**
காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணிவரை

(11795)

**077 623 4204, 077 288 0152**



## பௌதிகவியல் (Physics)

2023, 2024 உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களிற்காக பௌதிகவியல் தனியாகவும் (personal) குழுவாகவும் (group class) கற்பிக்கப்படும். (11772)

**076 157 0107**



## வீடு வாடகைக்கு

மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து 1 1/2 கி.மீ சுற்றாடலில், சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை. (11779)

**074 244 7036**



கற்பித்தலில் 24 ஆவது வருடம்...

## A/L -2024

**புவியியல் - N.பாபு**

**DMI** - ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
→ சனி, ஞாயிறு - 9 am

**C.C.A** - K.K.S வீதி, சுன்னாகம்.
→ சனி, ஞாயிறு - 5 pm

**மொடேண்** - சண்டிலிப்பாய்
→ வியாழன், வெள்ளி - 4pm

- புதிய, தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
- A/L இல் புவியியல் படிப்பதற்கு O/L இல் இந்தப்பாடம் படித்திருக்கத் தேவையில்லை.

(C-4451)

✆ - **077 936 5087**



## வேலையாள் தேவை

வீட்டில் தங்கி நின்று குழந்தைகளைப் பராமரிக்க வேலையாள் தேவை. (11785)

**077 030 6881**



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- ✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
- ✔ வயது-22 தொடக்கம் 35
- ✔ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4410)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் ✆ 0777-068-777



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



www.edus.lk
**eDUS** Learning made lovable | **Online School** | **Admissions Open..!**

இலங்கையின் முன்னணி ONLINE கல்வி நிறுவனத்திடமிருந்து

# G.C.E A/L 2024

மாணவர்களுக்கான

**வகுப்புக்கள் ஆரம்பம் - 10.06.2022**

**Bio, Maths - கணித, விஞ்ஞானப் பிரிவு**
- ✓ COMBINED MATHS ✓ CHEMISTRY ✓ I.C.T
- ✓ BIOLOGY ✓ PHYSICS ✓ AGRICULTURE

**Technology - தொழில்நுட்பப் பிரிவு**
- ✓ SFT ✓ BST ✓ AGRICULTURE
- ✓ ENGINEERING TECHNOLOGY ✓ I.C.T

**Commerce - வர்த்தகப் பிரிவு**
- ✓ BUSINESS STUDIES ✓ ACCOUNTING
- ✓ ECONOMICS ✓ I.C.T

**Arts stream - கலைப் பிரிவு**
- ✓ TAMIL ✓ POLITICAL SCIENCE ✓ HINDU CULTURE
- ✓ HISTORY ✓ GEOGRAPHY ✓ AGRICULTURE
- ✓ ISLAM ✓ LOGIC ✓ MEDIA

(11705)

- தலைசிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனிப்பு.
- குழப்பமில்லாத நேரசூசி.
- குறைந்த மாதாந்த கட்டணம்.
- நேர்த்தியான வகுப்பு முறைமை.
- மாதாந்தம் மீட்டல் பயிற்சி மற்றும் பரீட்சை.
- கல்வி ஒழுங்கு மற்றும் வரவு அவசியம்.
- தொடர்ச்சியான நிரந்தர Online வகுப்புக்கள்.

**ENGLISH & TAMIL MEDIUM**

**ADMISSIONS**
**0777 123 330**


## பாசமுள்ள எங்கள் அப்பாவின் 3ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



அமரர் திரு.

**செல்லையா காஞ்சிமாவடிவேல் (காஞ்சியப்பா)**

| அன்னை மடியில் | கடவுளின் திருவடியில் |
| --- | --- |
| 23.01.1928 | 11.06.2019 |

திதி - 08.06.2022

உங்களை நினைக்கும் போதெல்லாம்
விழியின் ஓரம்
உங்கள் நினைவுத் துளிகள்
கண்ணீராய் கரைகிறது...

உங்கள் பிரிவால் கலங்கும்
குடும்பத்தினர்,
மயிலியதனை,
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.